வலயக் கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு மேற்கு

**"COVID 19 கால மாற்று உபாய கல்வி நிகழ்ச்சிதிட்டம் - 2020**
**COVID19 Period Alternative Strategic Education Programme -2020"**

**வலயக் கல்வி அலுவலகம்**
**மட்டக்களப்பு மேற்கு**

**22 தமிழ் மொழியும் இலக்கியமும் I** | **மாதிரிப் பரீட்சை- 1**

தரம் - 11 | நேரம் - 1 மணித்தியாலம்

**கவனிக்க:**
- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01. "தண்டாமரையின் உடன்பிறந்தும்.." இங்கு இடம்பெறும் '**தண்**'என்பது.
    1. நுண் 2. அழகு 3. பெரிய 4. குளிர்மை

02. "தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன்.." இங்கு '**தெண்ணீர்**' என்பது.
    1. ஆழமான நீர் 2. குளிர்ந்த நீர் 3. தெளிந்த நீர் 4. குளத்து நீர்

03. "நாயனையர் கேண்மை தழீக் கொளல்.." இங்கு '**கேண்மை**' என்பதன் **எதிர்ப்பதம்.**
    1. கூட்டு 2. நட்பு 3. பகை 4. பொறாமை

04. "மாகமடங்கலும் மால்விடையும்.." இங்கு '**மாகமடங்கல்**' எனப்படுவது.
    1. யானை 2. காளை 3. சிங்கம் 4. ஆண்குதிரை

05. "கார்தட்டிய பஞ்ச காலத்திலே.." இங்கு '**கார்**' என்பதன் **எதிர்ப்பதம்.**
    1. கருமேகம் 2. சுடுசோறு 3. வெயில் 4. விளைச்சல்

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. ஆண் யானை களிறு என்பது போல் ஆண் குதிரை.
    1. குண்டு 2. கடுவன் 3. ஞமலி 4. கலை

07. ப்ரோஜெக்ஷன் (Projection) என்பதன் தமிழ் வடிவம்.
    1. ஒளியெறிதல் 2. ஊடுகதிர் 3. வெள்ளித்திரை 4. ஒளிவிளக்கு

08. "அதிருப்தி" என்பது எம்மொழிச் சொல்.
    1. தமிழ்மொழி 2. வடமொழி 3. அரபுமொழி 4. சிங்களமொழி

09. மூதாட்டி என்பதற்குரிய ஆண்பால்.
    1. புனிதன் 2. மூதாளன் 3. மூத்தோன் 4. மூதரையன்

10. எழுபத்தைந்தாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா.
1. பருத்திவிழா 2. பட்டு ஆண்டு 3. படிக விழா 4. பவள விழா

11. வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறுதல்.
1. அறம்பாடல் 2. அங்கதம் 3. ஓம்படை 4. கட்டியம்

12. ஆதரிப்பவரை வஞ்சித்தல் எனும் பொருள்தரும் மரபுத்தொடர்.
1. தேளிலிருந்து செவி கடித்தல் 2. வால்கட்டுதல்
3. ஆழம் பார்த்தல் 4. குட்டிச்சுவராதல்

13. பின்வருவனவற்றில் பாரசீக மொழிச் சொல் **அல்லாதது.**
1. முலாம் 2. சுமார் 3. துப்பாக்கி 4. மைனர்

14. ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்களாகி விகாரமின்றி தமிழில் வழங்கும் வடசொல்.
1. தற்சமம் 2. சுயம்பெழுத்து 3. தற்பவம் 4. தத்துவம்

15. சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறுவகையில் சொல்லுதல்.
1. உவமானம் 2. குழுவுக்குறி 3. இடக்கரடக்கல் 4. மறைமொழி

16. “தாயின் தவத்தால் தரணிகண்டான் இாமன்” இத்தொடரில் இடம்பெற்றுவந்துள்ள அணி.
1. உருவகம் 2. உயர்வுநவிற்சி 3. மடக்கு 4. தற்குறிப்பேற்றம்

17. பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர் குற்றியலுகரமாக அமைவது.
1. படாது 2. மாடு 3. பந்து 4. எள்ளு

18. “தேன்மொழி பேசினாள்” இது எவ்வகைத் தொகை.
1. உவமைத் தொகை 2. பண்புத் தொகை 3. உம்மைத் தெகை 4. அன்மொழித் தொகை

19. “காவலனே! காவலனே!” இங்கு இடம்பெற்றுள்ள வேற்றுமை.
1. முதலாம் வேற்றுமை 2. ஐந்தாம் வேற்றுமை 3. எட்டாம் வேற்றுமை 4. மூன்றாம் வேற்றமை

20. கடலலை , ஆணழகன் என்பது.
1. இயல்புப் புணர்ச்சி 2. தோன்றல் விகாரம் 3. கெடுதல் விகாரம் 4. திரிதல் விகாரம்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்க**

21. “அப்பாவுக்கு ஆங்கிலம் பேசத் தெரியும்” இங்கு **‘கு’** உருபு எப்பொருளில் இடம்பெறுகின்றது.
1. கொடை 2. தகுதி 3. அனுபவப்பேறு 4. நிமித்தகாரணம்

22. வேற்றுநிலை மெய்மயக்கம் இடம்பெற்று வரும் சொல்.
1. காய்ச்சல் 2. பட்டம் 3. தந்தை 4. துட்டு

23. பின்வருவனவற்றுள் எதிர்காலம் உணர்த்தும் இடைநிலைகள் எவை?
1. கின்று, கிறு 2. த், ட், ன் 3. ப், வ் 4. கிறு, ஆநின்று

24. உயிர்முன் மெய் புணர்தல் இடம்பெறும் சொல் **அல்லாதது.**
1. கரும்புத்துண்டு 2. பாலாடை 3. பசுவதை 4. குண்டுவீச்சு

25. “அடிவேண்டி அழுதவளை அம்மா அணைத்துக் கொண்டாள்” இத்தொடரில் இடம்பெறும் அழுதவளை என்பது எவ்வகைப் பெயர்.
   1. மாற்றுப் பெயர்   2. காரணப் பெயர்
   3. காரியப் பெயர்   4. வினையாலணையும் பெயர்

26. “அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல..” என்பதில் நீர்ப்பறவை என்பது.
   1. பண்புத்தொகை   2. அன்மொழித்தொகை
   3. உவமைத்தொகை   4. வேற்றுமைத்தொகை‘

27. பலர்பால் விகுதி கொண்ட சொல்.
   1. வந்தனர்   2. வருகிறது   3. ஆடினாள்   4. போயிற்று

28. போரில் வீரமரணம் எய்திய போர் வீரரின் பெயரையும் புகழையும் எழுதி நடப்படும் கல்.
   1. நாட்டுக்கல்   2. ஏட்டுக்கல்   3. உரைகல்   4. நடுகல்

29. பின்வருவனவற்றுள் “ககரம்” (g) ஒலியில் உச்சரிக்கப்படும் சொல்.
   1. பகல்   2. தங்கம்   3. ஆண்கள்   4. வெட்கம்

30. பின்வருவனவற்றுள் இதழ்குவியாது உச்சரிக்கப்படும் உகரம் உள்ள சொற்றொகுதி.
   1. மடு, ஏடு   2. பாக்கு, நுங்கு   3. முள்ளு, காசு   4. நண்டு, உடு

- **புள்ளிக் கோடிடப்பட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

31. பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்டம் தொடர்பாக............................. இடம்பெறுகிறது.
   1. விட்டுக்கொடுப்பு   2. தட்டிக்கேட்டல்   3. வெள்ளோட்டம்   4. விவாதம்

32. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தால் .......................... செய்யப்பட்டனர்.
   1. மீள்குடியேற்றம்   2. மீள்நிரப்பல்   3. மீள்வரவு   4. மீள்வலியுறுத்தம்

33. அமைச்சர் தமது அமைச்சின் செலவீனத்துக்கான நிதி போதாமை காரணத்தால் ……………….. பிரேரணையை சமர்ப்பித்தார்.
   1. குறை நிரப்பு   2. மேலதிக நிதியறிக்கை
   3. இடைக்கால அறிக்கை   4. துண்டுவிழும் தொகை

34. முயற்சியின்றிக் காரியம் கைகூடுவது துர்பலம் என்ற கருத்தை தரும் பழமொழி.
   1. பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும்.
   2. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
   3. மயிலே, மயிலே என்றால் இறகு கொடுக்குமா?
   4. வெறுங்கை முழம் போடுமா?

- **பின்வரும் வாக்கியத்தின் முதற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியை இனங்காண்க**

35. இராமனின் அம்பறாத் துணியில் இருந்த அம்பு.
   1. அனைத்தும் கூர்மையானவை.   2. ஒவ்வொன்றும் கூர்மையானது.
   3. கூர்மையும், உறுதியும் வாய்ந்தவை.   4. அவ்வளவும் உறுதியானவைகள்.

36. நீ கூப்பிட்டிராவிட்டால் அவர்
   1. போய் விட்டிருப்பார்.   2. போய்க் கொண்டிருக்கிறார்.
   3. போய்த்தானிருப்பார்.   4. போய்விட்டிருந்தார்.

- **பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் 37-39 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.**

திண்டோள் வயவேந்தர் செந்தாமரை முகம்போய்
வெண்டாமரையாய் வெளுத்தவே – ஒண்டாரைக்
கோமாலைவேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்தபோது.

37. இப்பாடலில் எத்திணை சார்ந்து இடம்பெறுகின்றது.
   1. காதல்
   2. வீரம்
   3. கொடை
   4. அறம்

38. செந்தாமரை எனும் சொல்லை பிரித்தெழுதினால்.
   1. செம்மை + தாமரை
   2. சிவப்பு + தாமரை
   3. செம் +தாமரை
   4. செந் +தாமரை

39. இப்பாடலில் இடம்பெறும் அணி.
   1. உருவகஅணி
   2. உவமைஅணி
   3. தற்குறிப்பேற்றணி
   4. உயர்வு நவிற்சியணி

40. **கீழ் காணப்படும் ஒழுங்கின்றிய வாக்கியங்களை பந்தியாக்குவதற்கான பொருத்தமான வைப்பு.**

அ) கடலை எவ்வாறாயினும் சென்றடையும் நீர் நிலைகள் போல அவை உள்ளன.
ஆ) இது கல்தோன்றா காலத்தில் முன்தோன்றிய தமிழுடன் போற்றி பேணப்பட்டது.
இ) மனிதனை உலகில் வாழ்வாங்கு வாழவைக்க மார்க்கங்கள் உதவுகின்றன.
ஈ) அவற்றுள் ஒன்று சிவனை முழுமுதலாகக் கொண்ட சைவசமயமாகும்.
உ) மனிதன் உள்ளவரை உணர்வுடன் இது உயிர்பெறும் எனவும் கூறுகின்றனர் சான்றோர்.

   1. இ , அ , ஈ , ஆ , உ
   2. இ , உ , ஆ , அ , ஈ
   3. இ , ஆ , அ , உ , ஈ
   4. இ , ஆ , ஈ , உ , அ